## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 6-6 - மாலுக்கு

**(ஆழ்வார் எம்பெருமானோடு கலந்து வாழப் பெறாமையால் மிக நைந்து தம் உடைமைகள் தாமே தம்மை விட்டு அகன்றமையை பிரிந்து வருந்தும் தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரத்தால் அருளிச் செய்தல்)**

3282 * மாலுக்கு * வையம் அளந்த மணாளற்கு *
நீலக் கரு நிற * மேக நியாயற்கு **
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு * என் கொங்கலர்
ஏலக் குழலி * இழந்தது சங்கே 1

3283 சங்கு வில் வாள் தண்டு * சக்கரக் கையற்கு *
செங்கனிவாய்ச் * செய்ய தாமரைக் கண்ணற்கு **
கொங்கலர் தண்ணந்துழாய் * முடியானுக்கு * என்
மங்கை இழந்தது * மாமை நிறமே 2

3284 நிறம் கரியானுக்கு * நீடுலகு உண்ட *
திறம் கிளர் வாய்ச் * சிறு கள்வன் அவற்கு[1] **
கறங்கிய சக்கரக் * கையவனுக்கு * என்
பிறங்கிரும் கூந்தல் * இழந்தது பீடே 3

3285 பீடுடை நான்முகனைப் * படைத்தானுக்கு *
மாடுடை வையம் * அளந்த மணாளற்கு **
நாடுடை மன்னர்க்குத் * தூது செல்[2] நம்பிக்கு * என்
பாடுடை அல்குல் * இழந்தது பண்பே 4

3286 பண்புடை வேதம் * பயந்த பரனுக்கு *
மண் புரை வையம் * இடந்த வராகற்கு **
தெண்புனல் பள்ளி * எம் தேவ பிரானுக்கு * என்
கண்புனை கோதை * இழந்தது கற்பே 5

3287 கற்பகக் காவன * நற்பல தோளற்கு *
பொற் சுடர்க் குன்றன்ன * பூந்தண் முடியற்கு **
நற்பல தாமரை * நாள் மலர்க் கையற்கு * என்
விற்புருவக் கொடி * தோற்றது மெய்யே 6

3288 மெய்யமர் பல்கலன் * நன்கு அணிந்தானுக்கு *
பையரவின் அணைப் * பள்ளியினானுக்கு **
கையொடு கால் செய்ய * கண்ண பிரானுக்கு* என்
தையல் இழந்தது * தன்னுடைச் சாயே 7

---

[1] கள்வர் அவர்க்கு
[2] செய்

3289 சாயக் குருந்தம் * ஒசித்த தமியற்கு *
மாயச் சகடம் * உதைத்த மணாளற்கு **
பேயைப் பிணம் படப் * பாலுண் பிரானுக்கு * என்
வாசக் குழலி * இழந்தது மாண்பே 8

3290 மாண்பமை கோலத்து * எம் மாயக் குறளற்கு *
சேண் சுடர்க் குன்றன்ன * செஞ்சுடர் மூர்த்திக்கு **
காண் பெரும் தோற்றத்து * எம் காகுத்த நம்பிக்கு * என்
பூண்புனை மென்முலை * தோற்றது பொற்பே 9

3291 பொற்பமை நீள் முடிப் * பூந்தண் துழாயற்கு *
மற்பொரு தோளுடை * மாயப் பிரானுக்கு **
நிற்பன பல்லுருவாய் * நிற்குமாயற்கு * என்
கற்புடையாட்டி * இழந்தது கட்டே 10

3292 * கட்டெழில் சோலை * நல் வேங்கடவாணனை *
கட்டெழில் தென்குருகூர்ச் * சடகோபன் சொல் **
கட்டெழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
கட்டெழில் வானவர் * போகம் உண்பாரே 11

**அடிவரவு:** மால் சங்கு நிறம் பீடு பண்பு கற்பகம் மெய் சாய
மாண்பு பொற்பு கட்டு உண்ணும்